மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

152—

தொழிற்சாலை

***37282—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதியில் யூகலிப்டஸ் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதியில் யூகலிப்டஸ் தைலம் தயாரிக்க அரசிடம் செயல் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அமைதி, வளம், வளர்ச்சி" என்ற தாரக மந்திரத்தோடு நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 99 சதவீதம் வெற்றியைப் பெற்று, உலகத்திலுள்ள அனைத்து தமிழக மக்களுடைய உயிர் நாடியாக, தாயாக, தந்தையாக, நம்பிக்கை நட்சத்திரமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாட்சிமைபொருந்திய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, ஒரு வறட்சியான தொகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப்

பகுதியில் இன்றைக்கு வனத் துறை மூலமாகவும், தனியார் மூலமாகவும் யூகலிப்டஸ் மரங்கள் அதிகமாக வளர்க்கப்பட்டு வருகின்றன. அங்கே இருக்கின்ற வனத் துறை அதிகாரிகளும், தனியாரும் மரத்தை வெட்டி வெளி மாவட்ட வியாபாரிகளுக்கு விற்கிறார்கள். 490 ஏக்கர் இடம் சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் வெற்றிடமாக இருக்கிறது. அந்த 490 ஏக்கர் வெற்றிடத்தில் யூகலிப்டஸ் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்கினால், அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை,எளிய மக்கள், படித்தவர்கள், இளைஞர்கள் போன்றவர்கள் எல்லாம் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, மானாமதுரை, சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் யூகலிப்டஸ் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் 9,197 ஹெக்டேர் நிலப்பரப்பில் இத்தகைய மரங்களெல்லாம் வளர்க்கப்படுகின்றன. மானாமதுரையில் இந்த மரங்களின் இலைகளைப் பொறுத்தமட்டில் 10 சதவிகிதம் மட்டுமே தைலம் இருக்கக்கூடிய இலைகளாக இருப்பதனால், நீலகிரி, கொடைக்கானல் போன்ற குளிர்ப்பிரதேசங்களில்தான் இத்தகைய ஆலைகளை அமைத்து, அதன் மூலமாகப் பயன்பெற முடியும். நம்முடைய பகுதியிலே இந்த மரங்களுடைய இலைகள் எல்லாம் விரைவிலே உதிர்ந்து விடுகின்றன. அதுமட்டுமல்லாமல், இந்த மரங்களெல்லாம் காகிதக் கூழ் தயாரிப்பதற்கும், மரக் கூழ் தயாரிப்பதற்கும் பயன்படுகின்றன. காகிதக் கூழ் தயாரிக்கும் ஆலைகள் தொடங்க தனியார் முன்வருவார்களேயானால், அந்தப் பகுதியிலே அரசு இத்தகைய தொழிற்சாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கும் எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி முழுக்க, முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கின்ற பகுதி. இப்பொழுது இயற்கை பொய்த்துவிட்ட காரணத்தினால் விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றனர். சில சமயங்களில் மானாமதுரை பகுதியிலிருந்தும், சிவகங்கை மாவட்டத்திலிருந்தும் வெளி மாவட்டங்களுக்குப் பிழைப்பு தேடிச் செல்லக்கூடிய ஓர் அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்த நிலையை மாற்றுவதற்கு, அங்கே விளைவிக்கப்படுகின்ற யூகலிப்டஸ் மரங்களின் இலைகளைக் கொண்டு தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்கினால், அந்தப் பகுதியிலுள்ள இளைஞர்களும், படித்தவர்களும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன். அதைப்போல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே தொழில்முனைவோர் முன்வந்தால், தொழிற்சாலையைக் கொண்டுவரலாம் என்ற பதிலைத் தந்திருக்கின்றார்கள். அவ்வாறு தொழில்முனைவோர் தொழிற்சாலையை அமைப்பதற்கு முன்வந்தால், அரசு என்னென்ன உதவிகளைச் செய்யும் என்பது குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கனிவான வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தப் பகுதியில் ஆய்வு செய்து தொழில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரத்தில், தொழில்முனைவோர் முன்வருவார்களேயானால், புதிய தொழில்முனைவோர் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அரசு மானியம் தரவிருக்கிறது. மேலும்,*

2014 ஜூலை 16]

பின்னிலைவு வட்டி மானியத்தில் 3 விழுக்காடு என்கின்ற வகையிலேயும், வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழும், மேலும் பல்வேறு திட்டங்களின்கீழும் இத்தகைய தொழில்முனைவோருக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நலத் திட்ட உதவிகளை சிறப்பாகச் செய்து வருகிறது. இவற்றை அந்தப் பகுதியிலே இருக்கிற தொழில்முனைவோர் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர்* **திரு. மு. முருகன்,** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

153—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***36200—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூரில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS